சுருக்கம்

நிர்வாகம் – தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை – பத்திரிகையாளர் ஓய்வூதியம் – தமிழ்நாட்டில் உள்ள ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படும் பத்திரிகையாளர் ஓய்வூதியம் ரூ.8,000/–லிருந்து ரூ.10,000/– ஆக உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (நிர்.4)த் துறை

அரசு ஆணை (நிலை) எண்: 163 நாள்: 21.09.2017

திருவள்ளுவர் ஆண்டு 2048

ஹேவிளம்பி வருடம் புரட்டாசி மாதம் – 5ம் நாள்

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.147. செய்தி மற்றும் சுற்றுலா (செய்தி வெளியீடு)த் துறை, நாள்.03.04.1986.
2. அரசாணை (நிலை) எண் 293, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (நிர்.4)த் துறை, நாள் 16.07.2010.
3. அரசாணை (நிலை) எண் 191, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (நிர்.4)த் துறை, நாள் 14.09.2011.
4. அரசாணை (நிலை) எண் 246, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (நிர்.4)த் துறை, நாள் 07.10.2013.
5. அரசாணை (நிலை) எண்:2, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (நிர்.4)த் துறை, நாள் 11 .01.2016.

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, பத்திரிகைத் துறையில் நீண்டகாலமாக பணியாற்றி, சமுதாய விழிப்புணர்விற்கு பாடுபட்டு, பணியிலிருந்து ஓய்வுபெற்று, வறுமை நிலையில் உள்ள பத்திரிகையாளர்களின் சமூகப் பணியைக் கருத்தில் கொண்டு நலிவடைந்த பத்திரிகையாளர்களுக்கு நிதி உதவி அளிக்க வகை செய்து மாதாந்திர ஓய்வூதியம் வழங்கும் திட்டம் 14.04.1986 முதல் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்டபோது மாதம் ரூ.250/– ஓய்வூதியம் வழங்கப்பட்டது. பின்னர் படிப்படியாக உயர்த்தப்பட்டு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி பத்திரிகையாளர் ஓய்வூதியம் ரூ.4,000/–லிருந்து ரூ.5,000/–ஆக உயர்த்தியும், மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைப்படி பத்திரிகையாளர் ஓய்வூதியம் ரூ.5,000/–லிருந்து ரூ.6,000/– ஆக உயர்த்தியும் மற்றும் மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணைப்படி பத்திரிகையாளர் ஓய்வூதியம் ரூ,6,000/–லிருந்து ரூ.7,500/– ஆக உயர்த்தி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைப்படி பத்திரிகையாளர் ஓய்வூதியம் ரூ.7,500/–லிருந்து ரூ.8,000/– ஆக உயர்த்தி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற பேரவையில், 19.07.2017 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன் கீழ் பத்திரிகையாளர்களது குடும்ப சூழ்நிலைகளையும் தற்போதைய கால சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு, பத்திரிகையாளர்களின் மாதாந்திர ஓய்வூதியத்தொகை ரூ.8,000/–லிருந்து ரூ.10,000/– ஆக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள்.

த.பி.பா.,